2nd copy

A 10

Brenda வின் January 29, 1969 கடிதத்தின் கேள்வி பதில்:

---

1. ஒரு நபருக்கு இடது கையை விட வலது கை உஷ்ணமாக இருக்குமென்று நான் சொன்னதன் காரணம் ஒரு நபருக்கு இடது கையைவிட வலது கைதான் அதிகமான வேலை செய்யும் இடது கை அதிகமான வேலை செய்வதில்லை. அதனால் வலது கை அதிகமான வேலை செய்வதால் அதற்கு அதிகமான உஷ்ணம் ஏற்படும் என்று நான் சொன்னேன். ~~வலது கை கு~~
வலது கையை விட இடது கை அடிக்கடி அசுத்தமானாலும் அதனால் உஷ்ணமேற்படாது. ஏனென்றால் இடது கைக்கு அதிகமான வேலை இல்லை.

இடது கையை விட வலது அடிக்கடி வேலை செய்வதால் வலது கைதான் உஷ்ணமென்று நான் சொல்கிறேன்.

2. திருமணகாலத்தில் பந்தல் போடுவது 11 கால், 12 கால் என்று கணக்கு இல்லையென்று நான் நினைக்கிறேன். அம்மாதிரி கணக்குள்ள பந்தலை நான் பார்த்ததில்லை. முக்கியமாக பந்தல் போடுவதற்கு 12 கால் என்பதுபோல் இரண்டு எண் முறையால் தான் கால்கள் நடுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் தான் பந்தல் சரியாக இருக்கும்.

இந்த பந்தல் சம்மந்தமான கேள்வியை இன்னும் பெரியவர்களிடம் கேட்டு பதில் எழுதுகிறேன். "பந்தல்" படமும் வரைந்து அனுப்புகிறேன்.

---

குறிப்பு:- பந்தல் விபரமும் 3 வது கேள்வியின் பதிலும் நான் தெற்கு திசை [illegible] பிரயாணம் செய்து வந்தபின் உங்களுக்கு எழுதி அனுப்புவேன்.

2nd copy

## ~~மாங்கல்~~ மங்கள ஸ்நானம்

பிராமணர் கல்யாணத்தில் (நான் முன்பு எழுதி அனுப்பிய பிராமணர் கல்யாண சீரை கவனியுங்கள்) பெண்ணு மாப்பிள்ளை இருவரையும் மணவரையில் பட்டுப்பாயில் கிழக்கு முகமாக உட்காரவைத்து அவர்களுடன் மாப்பிள்ளையின் தாய் தகப்பனை மாப்பிள்ளையின் பக்கம் உட்கார வைத்து பெண்ணின் தாய் தகப்பனை பெண்ணின் அருகில் உட்காரவைத்து சில பெண்கள் பாட்டுப்பாடுவார்கள். பிறகு, ஒரு பெண் நல்லெண்ணெயை கையில் தொட்டு மேற்சொன்ன ஆறுபேருடைய தலையிலும் துடைப்பாள். பிறகு, அந்த ஆறுபேருக்கும் நெற்றியில் குங்குமப் பொட்டு வைப்பார்கள் கழுத்தில் சந்தனம் பூசுவார்கள். பிறகு, அந்த ஆறுபேருக்கும் வெற்றிலைபாக்கு கொடுப்பார்கள். அதன் பின் ஆலாத்தி சுற்றுவார்கள். பிறகு, மணவரையில் உள்ள ஆறுபேரும் எழுந்து அங்குள்ள பெரியவர்கள் எல்லோரையும் கும்பிட்டு விட்டு குளிப்பதற்கு சென்றுவிடுவார்கள்.

மேற்சொன்ன ஆறுபேரும் குளித்துக் கொண்டு வந்த பின் நான் முன்பு அனுப்பிய சீரில் குறிப்பிட்டபடி எல்லோருக்கும் புதிய வேஷ்டி சேலை கொடுப்பார்கள். பிறகு, புரோகிதர் புண்ணியார்ச்சனை செய்வார்.

~~கங்கண~~

## கங்கணம் கட்டுதல்.

~~மாப்பிள்ளையும் அவர்~~ மாப்பிள்ளையை மணவரையில் கிழக்கு முகமாக உட்காரவைத்து அவருடைய தாய் தகப்பனை இருபக்கமும் உட்காரச் செய்வார்கள். பிறகு, புரோகிதர் தேங்காய் பழம், வெற்றிலைபாக்கு இவைகள் எல்லாம் எடுத்து ~~அ~~ மாப்பிள்ளையின் கையில் கொடுத்து மாப்பிள்ளையின் வலது கையில் மஞ்சள் நூல் கங்கணத்தை கட்டுவார் புரோகிதர். பிறகு, மாப்பிள்ளையும் அவர் பெற்றோர்களும் மணவரையை விட்டு எழுந்துவிடுவார்கள். பிறகு, பெண்ணை மணவரையில் கிழக்கு முகமாக உட்காரவைத்து பெண்ணின் பெற்றோர்களை இருபக்கமும் உட்கார வைத்து புரோகிதர் தேங்காய் பழத்தை எடுத்து பெண்ணின் கையில் கொடுத்து மஞ்சள் நூல் கங்கணத்தை எடுத்து பெண்ணின் இடது கையில் கங்கணத்தை கட்டுவார்.

மேலும், நேப்பாளத்தில் உள்ள பிராமணர் ஜாதி கல்யாணங்களில் நுகத்தடி, அல்லது கலப்பைபூட்டிய எருதுகள் இவைகள் எல்லாம் உபயோகிப்பதில்லை. மற்றும் Madhuparka அல்லது Saptapadi என்ற சீரும் இல்லை. இம்மாதிரி சீர்கள் எல்லாம் "வடமன்" என்ற பிராமணர் ஜாதியில் தான் செய்வார்களாம். இந்த வடமன் என்னும் பிராமணர்கள் ஜாதி சத்தியமங்கலம் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

2nd copy

இது ஒரு 12கால் உள்ள பந்தல் (கல்யாணப்பந்தல்)
இம்மாதிரி இரட்டை எண் (இரட்டைவடம்) கால்கள் உள்ள பந்தல் எத்தனை கால்கள்
வேண்டுமானாலும் உபயோகித்து பெரிய பந்தலும் போடலாம்.
ஆனால், 11கால் (ஒற்றைவட எண்) கால்கள் போட்டு பந்தல் போடமாட்டார்கள்.



1 x இந்தக் குறியிட்டிருப்பவைகள் வாழைமரங்கள்
2. பந்தலின் இருபக்கமும் வாழைக் கன்றுகள்.
3. பந்தலின்மேல் தென்னைமட்டைகள் (தென்னை ஓலைகள்) போடப்பட்டிருக்கிறது.



1
2
3
4
5
6
8
9
10
11
12
பந்தக்கால்
NO 1
NO 2
NO 3
NO 4
NO 5
NO 6
NO 7
NO 8
NO 9
NO 10
NO 11
NO 12